# முதலாம் தவணைப் பரீட்சை - 2017
## வணிகமும் கணக்கீடும்

| சுட்டெண் ........................ | தரம் :- 10 | நேரம் : 2 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

1) பொருட்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்தல் அல்லது விநியோகம் செய்தல் தொடர்பான பொருளாதார நடவடிக்கை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) வர்த்தகம் (2) பண்டமாற்று
(3) வணிகம் (4) வணிகநோக்கம்

2) பண்டங்களுக்கப் பதிலாகப் பண்டங்களை மாற்றிக்கொள்ளுதல் எது?
(1) வியாபாரம் (2) வர்த்தகம்
(3) சேவை (4) பண்டமாற்று

3) தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் உலக வர்த்தகத்திற்கு ஏற்பட்ட மிக நெருங்கிய தொடர்பை எவ்வாறு அழைப்பர்?
(1) வணிகம் (2) இலத்திரனியல் வர்த்தகம்
(3) இலத்திரனியல் பணம் (4) உலகக்கிராமம்

4) வணிகத்தின் பொது நோக்கங்களில் ஒன்று
(1) தொழிவாய்ப்பு (2) ஊழியர்நலன்
(3) இலாபம் உழைத்தல் (4) தொடர்பாடல்

5) நுகர்வோரது தேவைகள், விருப்பங்களைப் பூர்த்திசெய்தல் என்பது
(1) ஒரு வணிக துணை நோக்கமாகும்.
(2) ஒரு வணிக பொது நோக்கமாகும்.
(3) ஒரு வணிக சிறப்பு நோக்கமாகும்.
(4) ஒரு வணிக பொது, சிறப்பு நோக்கமாகும்.

6) தொன்றுதொட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுவரும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் எவை?
(1) உணவு, உடை, பாதுகாப்பு (2) உணவு, உடை, உறையுள்
(3) உணவு, கல்வி, சுகாதாரம் (4) உணவு, பாதுகாப்பு, வீட்டுவசதி

7) மனித தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற பல்வேறுபட்ட முறைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) தேவைகள் (2) விருப்பங்கள் (3) பொழுதுபோக்கு (4) நலன்கள்

8) பின்வருவனவற்றுள் உற்பத்திக்காரணி அல்லாதது
(1) நிலம் (2) உழைப்பு (3) இயந்திரம் (4) முயற்சி

9) மனித வாழ்க்கைக்கு அவசியமான தொட்டுணரக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பொருள் உற்பத்தி வணிகம் (2) சேவை உற்பத்தி வணிகம்
(3) பண்ட உற்பத்தி வணிகம் (4) சில்லறை வணிகம்

10) இலங்கையில் பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பது
(1) இலங்கைவங்கி (2) ஜனாதிபதி (3) பிரதமர் (4) மத்தியவங்கி

11) வணிகம் ஒன்றின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வணிகத்தின் வளங்களைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானங்களை மேற்கொள்பவர் யார்?

(1) உரிமையாளர் (2) முகாமையாளர் (3) நிறைவேற்றுநர் (4) தொழிலாளர்

12) தனது அறிவு, திறன் என்பவற்றைப் பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமத்தைச் சரியாக நிறைவேற்றுபவர்

(1) முகாமையாளர் (2) வாடிக்கையாளர் (3) ஊழியர்கள் (4) உரிமையாளர்

13) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பான புதிய சட்டம் யாது?

(1) 1984ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச்சட்டம்

(2) 2003ம் ஆண்டு பாவனையாளர் அலுவல்கள் சட்டம்

(3) 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்

(4) 1890ம் ஆண்டு பங்குடமைச் சட்டம்

14) நாடொன்றின் வருமானப் பரம்பல் என்றால் என்ன?

(1) நாட்டின் தேசிய வருமானம் தன்நாட்டு மக்களிடையே பகிரும் முறை

(2) நாட்டின் மொத்த வருமானம் வீழ்ச்சியடைதல்

(3) விலைமட்ட தொடர் அதிகரிப்பாகும்

(4) சமமற்ற வருமானம் கிடைத்தல்

15) பொருட்கள் சேவைகளது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?

(1) நிறைதொழில்மட்டம்

(2 பணச்சுருக்கம்

(3) பணவீக்கம்

(4) செலாவணிமாற்றம்

16) வணிகமொன்றுக்கு போட்டியாளர் உருவாகுதல் இயற்கை அனர்த்த பாதிப்பு ஏற்படுதல் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) பலம் (2) பலவீனம்

(3) வாய்ப்புக்கள் (4) அச்சுறுத்தல்கள்

17) இலங்கையில் கூடுதலாகக் காணப்படும் வணிகவகை யாது?

(1) பங்குடமை (2) கம்பனி

(3) தனியாள் உரிமை (4) கூட்டுமுயற்சி

18) தனி உரிமை வணிகத்தின் பண்பு அல்லாதது

(1) சட்டஆளுமை இன்மை

(2) தொடர்ந்து இயங்கும் தன்மை அற்றது

(3) பதிவுசெய்யத் தேவையில்லை

(4) முகாமையில் பலர் பங்குபற்றல்

19) பங்குடமையின் உறுப்பினர்களின் உச்ச எண்ணிக்கை

(1) நான்கு (2) பத்து (3) இருபது (4) ஐம்பது

20) பங்குடமையின் பங்காளரது உச்ச எண்ணிக்கையைக் குறிப்பிடும் சட்டம்

(1) பங்குடமைச்சட்டம் (2) கம்பனிச்சட்டம்

(3) மோசடி தவிர்ப்புச் சட்டம் (4) தனிவியாபாரச்சட்டம்

Education கல்வி අධ්‍යාපන

21) பங்குடமையின் ஆரம்ப மூலதனம் ரூபா 1000 அல்லது அதற்கு மேற்படக் காணப்படின் பங்குடமையானது எழுத்துமூல ஒப்பந்தத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த எழுத்து மூல ஒப்பந்தம் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) ஒப்பந்தம் (2) பங்குடமை உறுதி
(3) பங்குடமை வாசகம் (4) சட்ட ஆளுமை

22) உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உற்பத்தியின் போது துணையாகக் கொள்ளப்படுபவைகளும் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) உழைப்பு (2) நிலம் (3) முயற்சி (4) மூலதனம்

23) நனோ தொழில்நுட்ப வளர்ச்சியினால் வர்த்தக, விவசாய, மருத்துவத் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது வணிகத்தின் எத்தகைய காரணியைக் குறிக்கும்?

(1) சட்டச்சூழல் (2) பொருளியற்சூழல்
(3) வர்த்தகச்சூழல் (4) தொழில்நுட்பச்சூழல்

24) பொருட்கள் சேவைகளின் இறுதிப் பாவனையாளன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

(1) உற்பத்தியாளன் (2) மொத்தவியாபாரி (3) சில்லறைவியாபாரி (4) நுகர்வோன்

25) சேவை உற்பத்தி வணிகத்திற்கு உதாரணம் தருக.

(1) ஐஸ்கிறீம் வியாபாரம் (2) சிகையலங்காரம் (3) சுப்பர்மார்க்கற் (4) KFC

(25x2 = 50 புள்ளிகள்)

## பகுதி - II

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(1) பிரபல பாடசாலை ஒன்றில் வணிகக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.சாரங்கன் என்பவர் பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற பின் உள்ளூர் பழவகைகளைப் பயன்படுத்திப் பழரசம் தயாரித்து விற்பனைசெய்யும் வணிகம் ஒன்றினை ஆரம்பித்து அதற்கு "குளிர்மை" எனப் பெயரிட்டார். இவ்வணிக நிறுவனம் யாழ் மத்திய பேரூந்து நிலையத்திற்கு அண்மையில் அமைந்திருந்தமையால் அதிகளவு வாடிக்கையாளர்களைக் கொண்டிருந்தது. இவர் தனது நிறுவனத்தில் வேறு நிறுவனங்களில் பணியாற்றி அனுபவம் மிக்க ஊழியர்களையும் தனியார் வங்கி ஒன்றில் முகாமையாளராக இருந்து ஓய்வுபெற்ற நண்பனான திரு. அரவிந்தன் என்பவரை முகாமையாளராகவும் தெரிவுசெய்து வெற்றிகரமாக நடத்திவந்தார். வியாபாரம் வெகுவிரைவில் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அதனைச் சட்ட ஆளுமைமிக்க அமைப்பாக மாற்ற எண்ணினார்.

மேற்தரப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) திரு. சாரங்கன் ஆரம்பித்த வணிக அமைப்பு எத்தகையது?
(ii) மேற்படி வணிக அமைப்பு பதிவுசெய்ய வேண்டுமா? காரணம் தருக.
(iii) இவ்வணிகத்தை ஆரம்பிக்கும் போது நிதியினைத் திரட்டியிருக்கக் கூடிய வழிகள் எவை?
(iv) இவ்வணிகத்தின் வெற்றிக்குக் காரணமாக இருந்த காரணிகள் எவை?
(v) மேற்கூறப்பட்ட பந்தியில் காணப்படும் அகச்சூழல் காரணிகள் எவை?
(vi) திரு. சாரங்கனால் ஆரம்பிக்கப்பட்ட வணிக அமைப்பின் பண்புகள் 4 தருக.
(vii) இவர் மாற்ற உத்தேசித்திருக்கும் வணிக அமைப்பு யாது? அது எச்சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட வேண்டும்?
(viii) மாற்ற உத்தேசித்த வணிகத்தினால் கிடைக்கும் நன்மைகள் 4 தருக.
(ix) "சட்ட ஆளுமை" என்றால் என்ன?
(x) வணிகங்களின் புறச்சூழல் காரணிகள் 4 தருக.

(20 புள்ளிகள்)

2)

(i) தேவைகளையும் விருப்பங்களையும் வேறுபடுத்துக.
(ii) வணிகமொன்றின் துணை நோக்கங்கள் எவை?
(iii) உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்கான சன்மானங்களையும் தருக.
(iv) தமது தேவைகளைப் பூர்த்திசெய்யும் போது நுகர்வோர் எதிர்பார்க்கும் நோக்கங்கள் எவை?
(v) உற்பத்தி செய்யப்புடும் உற்பத்திகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வணிகங்களை வகைப்படுத்துக.

(10 புள்ளிகள்)

3)

(i) வணிக அமைப்புக்களை நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.
(ii) பங்குடமை வணிகமொன்று பதிவுசெய்யப்பட வேண்டுமா? இல்லையா? காரணம் தருக.
(iii) கூட்டுறவு அமைப்பின் பண்புகள் 4 தருக.
(iv) கூட்டுத்தாபனங்கள் உருவாக்கப்படுவதற்கான சட்டங்கள் எவை?
(v) பொதுத்துறை வணிக நிறுவனங்களுக்கு உதாரணம் தருக.

(10 புள்ளிகள்)

4)

(i) வணிகச் சூழலினை வகைப்படுத்துக.
(ii) பொருளாதாரச்சூழல் காரணிகள் 4 தருக.
(iii) வணிகம் ஒன்றின் அகச்சூழலை அறிவதன் ஊடாக இனங்கண்டு கொள்ளக்கூடியவை எவை?
(iv) உள்நாட்டு வணிகத்தின் பூகோளமயச் சூழலினால் ஏற்புடும் சாதகமான விளைவுகள் 3 தருக.
(v) சட்டச்சூழல் என்றால் என்ன?

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page